தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்
மலர் 1] [இதழ் 132

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்.. அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF THE D.P.F.

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)

ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0

வெளிநாடு:

ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

சென்னை : கார்த்திகை 1உ திங்கள் (16—11—53) ★ வெளியூர் : கார்த்திகை 1உ செவ்வாய் (17—11—53)

சி. ஆர். பூட்டிய விலங்கு தூளாகிறது!

20-ந் தேதியோடு ஆரூர் ...ளவலின் இருட்டறை வாசம் தொலைகிறது!

திருச்சி சிறை, செயல் வீரரை ...மிட்டத் தங்கமாக்கி இருக்கிறது!

இத்திங்கள் 21-ந் தேதி அடக்குமுறை ...சியைக் காண கருணாநிதி விடுதலை பெறுகிறார்

(நமது நிருபர் டிரங்க் செய்தி)

திருச்சி, நவ. 16

கல்லக்குடி அறப் போராட்டத் தலைவர், தோழர் மு. கருணாநிதி, இம்மாதம் 21-ந் தேதி விடுதலை பெறுகிறார்.

மு கருணாநிதிக்கு, அரியலூர் சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில். 17—7—53 அன்று, 5 மாதக் கடுங்காவல் தண்டனையும், ரூ. 35 அபராதமும், தவறினால், மேலும் ஒரு மாத கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது.

அண்மையில், தோழர் கருணாநிதி அவர்களின் 'காரை' ரூ. 35 அபராதத்திற்காக, அரசியலார் 'ஜப்தி' செய்தமைக்காக, ஒரு மாத தண்டனை குறைக்கப்பட்டது. மேலும், கடினகாவல் காரணமாக சில நாட்கள் குறைக்கப்பட்டு, இம்மாதம் 20-ந் தேதியோடு தண்டனை முடிவடைகிறது

கல்லக்குடி அறப்போர்

★

இன்று 126-வது நாள்

★

கல்லக்குடி அறப்போர் தலைவர் மு. கருணாநிதி, மற்றும் பல தோழர்கள் சிறையில்

★

இன்று 125-வது நாள்

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகத் தோழர்களுக்கு!

தோழர்களே! தூத்துக்குடி தி. மு. கழகத் தோழர்கள்மீது, ஆச்சாரியாரின் சர்க்கார், சதி வழக்கு தொடர்ந்திருப்பதை, நன்கறிவீர்கள்.

சதி வழக்கு நிதிக்காக, நமது மாவட்டச் சார்பில், 2,000 ரூபாயாவது கொடுத்து நமது கண்ணியத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். ஆதலால், இந்தக் கிழமை, நான் ஒவ்வொரு கிளைக் கழகங்களுக்கும் "நிதி" வசூலுக்காக வர இருக்கிறேன். அவ்வமயம், முடிந்த அளவு முயன்று, பெரும் அளவில் பொருளுதவி அளிக்குமாறு வேண்டுகிறேன்.

சி. வி. எம். அண்ணாமலை,
செயலாளர், தி. மு. கழகம்
செங்கற்பட்டு மாவட்டம்.

சைதை தோழர்கள் சிறை புகுந்தனர்

தி. மு. கழகத் தோழர் சிறைபுகுந்தார்

சென்னை, நவ. 16—

நேரு பண்டிதர் சென்னைக்கு வந்தபோது அவருக்கு கருப்புக் கொடி காட்டச் சென்று நேரு வருவதற்கு முன்பே கைது செய்யப்பட்ட தி. மு. கழகத் தோழர் ஆர். ருக்மாங்கதன வழக்கில் தீர்ப்பு கூறப்பட்டது.

தொடர்ந்து பலமுறை சர்க்கார் தரப்பு சாட்சிகள் வராதது குறித்து நீதிபதி கண்டித்த பின், நவ. 14-ந் தேதி விசாரணையில் சாட்சிகள் வந்திருந்தனர். விசாரணையின் முடிவில், தோழர் ருக்மாங்கதனுக்கு ரூ. 3 அபராதமும், கட்டத் தவறினால் 3 நாள் சிறை தண்டனையும் விதிக்கப்பட்டது.

தோழர் சிறை புகுந்தார், இன்று விடுதலை பெறுவார்.

சென்னை, நவ. 16—

சென்னை முதலமைச்சர் ஆச்சாரியாருக்கு 20—9—53 அன்று கருப்புக்கொடி காட்டி அதிருப்தியைத் தெரிவித்துக் கொண்ட சைதைத் தோழர்கள் மீது தொடரப்பட்ட வழக்கில் 6 வாய்தாக்களுக்குப் பின் சனியன்று, ரூ 10 அபராதம் அல்லது ஒரு வார சிறை தண்டனை விதிக்கப்பட்டது. தோழர்கள் அபராதம் கட்ட மறுத்து சிறை புகுந்தனர்.

அவர்கள் பெயர்கள் :—

பி. அண்ணா...ை, எஸ். ராஜவேலு, இராமசந்திரன், எம். ஆறுமுகம், ஆர். எஸ். தம்பி

ஜப்பானிலிருந்து 100 ரயில் எஞ்சின்கள்!

பம்பாய், நவ. 16—

ஜப்பானிலிருந்து இந்தியா ரூ. 4 கோடி பெறுமான நாரோ பிராட்கேஜ் ரயில் எஞ்சின்களை வாங்கப் போகிறது. இவைகளை இரண்டு ஆண்டு காலத்தில் கொடுத்தாக வேண்டும்.

"சுகாதாரம் குறைந்த வாழ்விலேதான் நோய்கள் வருகின்றன"

இந்தியாவில் அதனால் மடிந்தோர் எண்ணிக்கை— ஐ. நா. நிபுணர்கள் கருத்து

சென்னை, நவ. 16—

"உலகின் மக்கள் தொகை 230,00,00,000 பேர்; இதில், மூன்றில் இரண்டு பங்கினர் கிராமங்களில் வசிக்கின்றனர். இந்தக் கிராமவாசிகளில் பெரும்பாலோர் சுகாதார சூழ்நிலையில் வசிக்காததின் காரணமாக நோய்களுக்கு உள்ளாகிறார்கள்."

"இந்தியாவில் சுகாதாரமின்மையால்தான் காலரா, டயாரியா, டைபாய்ட் போன்ற காய்ச்சல்கள் வருகின்றன."

"ஒரு ஆண்டில் மட்டும், இந்தியாவில், காலராவினால் சுமார் 2,00,000 பேர்களும், சீதபேதி போன்ற நோய்களால் 2,20,000 பேர்களும் டைபாய்ட், இதர காய்ச்சல்களினால் 33,00,000 பேர்களும் மாண்டுள்ளனர்."

"இந்த வியாதிகளின் சிகிச்சைக்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 2,74,719 ஆகும்."

—இவ்வாறு, உலக சுகாதார நிலையங்களின் நிபுணர்கள், தங்கள் கருத்தை வெளியிட்டுள்ளனர்.

வடக்கிலே வளம்! தெற்கிலே வறுமை!

1951 சர்க்கார் 'சென்சஸ்' காட்டும் பாடம்

'சுதேசமித்திரன்,' 'திராவிட நாடு' கோரிக்கையை ஏற்கவில்லை!

ஆனால் நிலைமையை தெளிவுபடுத்துகிறது!

"மொத்த ஜனத்தொகையில், சொந்த வருவாயைக் கொண்டு வாழ்க்கை நடத்துபவர்கள் 10 கோடிதான். சுமார் 4 கோடியினர் சம்பாத்தியமுள்ளவர்களாயினும், பிறர் உதவியைக் கொண்டே காலம் தள்ளுகின்றனர்."

"இந்தியாவின் மற்ற பகுதிகளை விட தென்னிந்தியாவிலேயே சம்பாத்தியமுள்ளவர்களின் விகிதாச்சாரம் மிகக் குறைவு. அதாவது, இங்கு வசிப்போரில் அத்தகையோரின் தொகை 26 சதவிகிதம் ...ன். பிறர் தயவால் பிழைப்பவர்களின் எண்ணிக்கையும், ...னிந்தியாவில்தான் அதிகம். அவ்வெண்ணிக்கை இங்குள்ள மொ... ஜனத்தொகையில் 69 சதவிகிதம்."

"...த் தேசத்தில் மற்றப் பகுதிகளைவிட, வடக்கு, வடமேற்கு, ...வடகிழக்குப் பகுதிகளில் முறையே சம்பாத்தியமுள்ளவர்க... எண்ணிக்கை அதிகம்."

"இதற்கு விவசா... ...விட, அப்பகுதிகளில் மற்ற தொழில்களும், வர்த்தக... ...சியடைந்திருப்பதே முக்கிய காரணமாக இருந்திருக்கக்கூ..."

"மேற்குறித்த புள்ளி விபர... ...கவனிக்கும் யாரும் கடல்கடந்த இந்தியரில் தென்னாட்ட... ...தே அதிகமாக இருப்பதுபற்றி சிறிதும் வியப்படைவதற்கில்லை."

"பிழைப்பை நாடி வெளி தேசங்களுக்குச் சென்... ...யேறிய இந்தியர்களில் பாதி பேருக்குமேல் தென்னிந்தியர் ... குறிப்பிடத்தக்கது."

"சமீபகாலத்தில் பர்மா, மலேயா முதலிய இடங்களிலிருந்து தமிழர் பலர் பல்வேறு காரணங்களை முன்னிட்டு, தாயகம் திரும்பியிருக்கலாம்."

"ஆனால் தென்னாட்டில் பிழைப்புக்கான வசதி பெருகிவிட்டதாக எண்ணி அவர்கள் திரும்பவில்லை. தொழில் வர்த்தகத் துறைகளில் நாட்டின் மற்ற பகுதிகளை விட எப்போதும்போல் இப்போதும் தென்பகுதிதான் மிகவும் மட்டமானது என்பதை ஜன கணித அறிக்கை தெளிவாக அறிவுறுத்துகிறது."

"இந்தியப் பொருளாதார அபிவிருத்திக்கு திட்டமிடும் பொறுப்புள்ளவர்கள் இதிலிருந்து அறியக் கிடக்கும் ஒரு உண்மை மிக்க பட்டவர்த்தனமானது."

"அதாவது அத்தகைய அபிவிருத்தித் திட்டங்களில் முதலிடம் தென்னிந்தியாவுக்கு உரியது என்பதை அவர்கள் உணர்வார்களென்று எண்ணுகிறோம். சமத்துவ அடிப்படை மீதமைந்த ஒரு சமுதாயத்தை உருவாக்குவதென்ற கொள்கையை ஒப்புக்கொள்ளும் யாரும் தென்னிந்தியாவின் முதல் பாத்யதையை ஆட்சேபிக்க இடமில்லை."

"மேலும் இப்பகுதியில் விவசாயத்தையும் மற்ற தொழில்களையும் வளர்க்க வசதிகள் இல்லாமல் போய்விடவில்லை."

"குறிப்பாக, நெய்வேலி சுரங்கத் திட்டம் அமுலுக்கு வந்துள்ள இந்நிலையிலாவது மத்திய அதிகாரிகள் இப்பிராந்தியத் தொழில் வளர்ச்சிக்கும் போதிய முக்கியத்துவம் அளிப்பாரென்று எண்ணுகிறோம்."

—இவ்வாறு 'உண்மையும் நீதியும்' என்ற ...ப்பில் 12—11—53 அன்று 'சுதேசமித்திரன்' தலையங்கம் தீட்டியிருக்கிறது.

ரூ 30 லட்சம் பெறுமான நீலக்கல்

ரங்கூன், நவ. 16—

உலகிலேயே பெரியதும் அதிக மதிப்புள்ளதுமான நீலக்கல் மேல் பர்மாவில் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நீலக்கல் பட்டை தீர்க்கப் பெற்றால் ரூ 80 லட்சத்திற்கு விலை போகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

தாராள மனப்பான்மை!

கொழும்பு, நவ. 16—

இலங்கை பிரதம மந்திரி ஜான் கொத்தலவாலா, தன் முதல் மாத சம்பளத்தை ஊமை, செவிடர்கள் பள்ளிக்கு நன்கொடையளிக்க யோசித்திருப்பதாகத் தெரிகிறது. இவர் மாத சம்பளம் ரூ 1600.

மூவர் சிறையில்!
இன்று
77-வது நாள்

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை : 16—11—1953 திங்கள்

'சமரச ஞான மகான்!'

சில ஆண்டுகளுக்கு முன்பாக தமிழ்நாட்டு மக்களின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்ததும், பட உற்பத்தியாளர்களுக்கு நல்ல பணவேட்டையாக அமைந்து இருந்ததுமான 'சிந்தாமணி' பேசும் படத்தை தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவர். அதில் ஒரு பாட்டு:—

"ஜாதி உயர்வு தாழ்வு பேசுதல் தீது!
சமரச ஞான மகான்களுக்கு அது கிடையாது!"

இந்தப் பாட்டின் கருத்து, ஜாதியில் உயர்வு தாழ்வு பேசுவது சாமானிய மனிதர்களின் செயல் — இல்லை — சேட்டை; ஆனால், மகான் கூட்டத்திலும் சிறப்பெய்தியுள்ள சமரச ஞான மகான்களுக்கு 'அது கிடையாது' — அவ்வளவு கடல் போன்ற பரந்த உள்ளம்! என்பதாகும்.

நமது சென்னை சர்க்காரின் பீடத்தில் அமர்ந்திருக்கும் முதல் அமைச்சர் சேலம் கனம் சக்ரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்களை, நாமெல்லாம் ஓர் 'சமரச ஞான மகான்' என்றுதான் பிறர் நினைக்க வேண்டும், நம்ப வேண்டும் என்று ஆசை கொள்வதுபோல் பல வேலை செய்கிறார். உண்மையிலேயே நாம், அவரை ஒரு ஒப்பற்ற சமரச ஞான மகானாகத்தான் காண விரும்புகிறோம் ஆனால், அந்தப் பெருமையை நம் போன்ற சாமானியர்களுக்குத் தருவதா என்று அமைச்சர் ஆச்சாரியார் தீர்மானித்து நடக்கிறார்.

நாம் மட்டும் அல்ல; அவருடைய கூட்டு அணியிலே இருப்பதாகச் சொல்லிக்கொண்டிருக்கிற—நம்பிக் கிடக்கிற சத்திரத்து உறவினர்களுக்குக்கூட, அமைச்சர் ஆச்சாரியாரை சமரச ஞான மகானாகக் காண வேண்டும் என்ற தீரா ஆசைதான்; ஆனால், அவர்கள் இச்சையையும் பூர்த்தி செய்ய, இந்த நல்லவரின் இளம் பிள்ளைப் பயிற்சி, இந்த முதுமையிலும் அவரை விட்டுத் தொலைய மறுக்கிறது!

ஜாதி, உயர்வு, தாழ்வு எனும் [illegible]ன் கொடிய முரட்டுக் கரங்களின் பிடியில் [illegible] மானியமானவர்கள் தான், விடுபட வழிவகை [illegible] காணாமல், அந்தச் சாதி சேற்றிலேயே உ[illegible]ண்டு கிடக்கிறார்கள் என்றால், அமைச்சர் [illegible] போன்ற 'அவதார புருஷர்' கூட, [illegible] சாதி சனியனின் மோதுதலுக்குப் பலியாகி, [illegible] எப்படி பேயாட்டம் போட வேண்டு[illegible] காங்கிரஸ் கட்சியில் இன்றும் உள்ள நல[illegible]ரிலே சிலர், சேயயான சந்தேகம் கொள்ளுகின்றனர்.

இத்தகைய மதியினர், ஆச்சாரியார் அவர்களின் நண்பர்களே யல்லாது மாற்றுக்கள் அல்லர். 'ஜாதி கர்வம் கொண்டவர்' 'வகுப்பு வெறி பிடித்தவர்' என்ற மாசுகறை, ஆச்சாரியாரை தீண்டக்கூடாது—நாடக் கூடாது என்ற நல் உள்ளம் இயல்பாகவே பெற்றுள்ளவர்கள் இவர்கள்.

இவர்களுடைய நலெண்ணத்திலும் மண் விழச் செய்து வருகிறார், அன்பர் ஆச்சாரியார்!

அறிந்துதான் செய்கிறாரா, அறியாமல்தான் செய்கிறாரா என, ஐயம் கொள்ளும் கஷ்டத்தை, அவருடைய நண்பர்களுக்குக் கொடுக்கவில்லை அமைச்சர் ஆச்சாரியார்!

இதோ, ஆச்சாரியார், தனது உள்ளக்கிடக்கையை, கல்லின்மேல் பொறித்த எழுத்தைப்போல், அனைவரும் புரிந்து கொள்ளும் முறையில் பகிரங்கமாக விளக்கிக் கூறியிருக்கிறார். அது, இது:—

'உங்கள் வகுப்பைப்போல் ஒரு சிறு வகுப்பைச் சார்ந்தவன் தான் நான். காங்கிரசில் உள்ள, அல்லது சட்டசபையில் உள்ள ஒவ்வொரு கட்சி அங்கத்தினரும் ஒரு குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்தவர் என்ற எண்ணம் இருப்பதால், அவர்களும் உங்களைப்போல ஒரு சிறுபான்மை வகுப்பினராகவே நினைக்கின்றனர்.'

என்றும்,

'ஒவ்வொரு ஜாதியும் தன்னை விருத்தி செய்துகொள்ள வேண்டுமென்று முயல்கிறது"

"இதனால் தனிப்பட்ட ஜாதி உணர்ச்சி ஏற்படுகிறது."

"எனினும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவினாலொழிய, முன்னேற முடியாது."

என்றும்,

"உதவி செய்வதாக இருந்தாலும், நெருங்கினவர்களுக்குத் தானே உதவி செய்ய முடியும்?"

"ஆதலின், முதலியார், அல்லது நாயுடுமார்கள், நாயக்கர்கள் யாராயிருந்தாலும் தங்கள் ஜாதிக்கு உதவ வேண்டுமென கூறுகின்றனர்."

"இதனால் ஜாதி என்ற வியாதி, இந்நாட்டில் வளர்ந்தோங்கி விட்டது."

"பிராமணர்களிலும் பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன."

"இதர விஷயங்களில் சிறந்தவர்கள் என்று கருதப்படுபவர்கள், இந்த ஜாதி விஷயத்தில் தவறு செய்து கொண்டு இருப்பதினால், நாட்டு முன்னேற்றத்துக்குத் தடங்கலாய் இருக்கின்றனர்."

"உதவி செய்வதாக இருந்தால் நெருங்கினவர்களுக்குத் தானே உதவி செய்ய முடியும்?"

அமைச்சர் ஆச்சாரியாரும், உயர் நீதிமன்ற நீதிபதிகள் இருவர் நியமன விஷயத்திலும், இதே கொடிவழிப்பட்டியை மேற்கொண்டு இருக்கிறார்! இதில் தவறு காணுவது அபசாரம்!

இதைக் குறித்து நாம் குறைபடக் கூடாது. நாம் சந்தோஷப்பட வேண்டும்—அதுவும் இரட்டிப்பாக!

"பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் உதவினாலொழிய, முன்னேற முடியாது."

இதுவும், ஆச்சாரியார் திருவாய் மலர்ந்தருளியுள்ளது தான். 'சமரச ஞான மகானு'ன அமைச்சர் ஆச்சாரியாரின் இந்த 'வகுப்பு வெறி'யை நாம், 'பரஸ்பர உதவி' என்று எண்ணிக்கொள்ள வேண்டும்! இப்படி நாம் நினைத்துக் கொண்டால்தான் நாடு முன்னேறும்!

அவரே சொல்லுகிறார்:—

"இதர விஷயங்களில் சிறந்தவர்கள் என்று கருதப்படுபவர்கள், இந்த ஜாதி விஷயத்தில் தவறு செய்துகொண்டு இருப்பதினால், நாட்டு முன்னேற்றத்துக்குத் தடங்கலாய் இருக்கின்றனர்."

ஆச்சாரியாரின் நீதிபதிகள் நியமன விஷயத்தில், அவரே குறிப்பிடும் 'தவறை,' அவரே செய்து 'நாட்டின் முன்னேற்றத்துக்குத் தடங்கலாய்' இருக்கிறாரே என்று மட்டும் நாம் கேட்கக்கூடாது! அப்படிக் கேட்பது அடிகட்டின 'வகுப்பு வாதம்' 'வகுப்புத் துவேஷம்' — இப்படி அமைச்சர் ஆச்சாரியார் அகராதியில் எழுதப்பட்டு இருக்கிறது. 'சமரச ஞான மகான்'களில் பல ரகம் உண்டு. அதிலே, அமைச்சர் ஆச்சாரியார் ஒரு தினுசு! அவ்வளவுதான்!

சென்னை உயர் நீதி மன்றத்தில்

இரு நீதிபதிகள்!

அய்யங்காரும், அய்யரும் நியமிக்கப்பட்டு விட்டனர்

சென்னை, நவ. 15—

பின்கண்ட இருவர்களையும், சென்னை உயர்நீதி மன்றத்தின் நீதிபதிகளாக இந்தியக் குடியரசுத் தலைவர் நியமித்து இருக்கிறார்.

ந[illegible]ம ராஜகோபால அய்யங்கார் எம். ஏ., எம். எல்., அவர்கள். என்றைய தினம் பணிபுரிய முன்வருகிறாரோ, அன்றுமுதல் அவர் நீதிபதியாகிறார்.

கொண்டகுண்டா உமாமகேஸ்வரன் (அய்யர்) பி.ஏ.,பி.எல்., 25—11—53 முதல் நீதிபதியாகிறார்.

அண்ணாதுரை — சம்பத் சந்திப்பு

சென்னை, நவ. 16 –

சென்ற வாரம், டா[illegible]மியாபுரம் கலக வழக்கின் கோர்ட்டில் இருந்து க[illegible]னித்த[illegible]டு, தோழர் மு. கருணாநிதியை திருச்சி சிறையில் சந்[illegible]துவிட்டு, சென்னைக்கு வந்த, வழக்கறிஞர் இரா. இ[illegible]நதி இன்று சிறையில் தோழர் அண்ணாதுரை அவர்[illegible] சந்தித்து, தி. மு. கழக சம்பந்தமான வழக்குகளை ப[illegible] பேசிவிட்டு, கடலூர் சென்றார்.

[illegible]ர்கள் செ[illegible]ார்!

[illegible], நவ. 15—

இராசகோபாலாச்சாரியாருக்கு விரோதமாக சில காங்கிரஸ் சக்காரர்கள் கையெழுத்து வாங்கும் இயக்கம் பற்றி, அமைச்சர் பக்தவத்சலம் திருவள்ளூரில் பேசுகையில் கூறியதாவது:—

"[illegible], ஜனநாயகத்திற்கு விரோதமான முறையில் சட்டசபை உறுப்பினர்களிடமிருந்து [illegible]டி கட்டாயப்படுத்திக் கையெழுத்து வாங்கப்படுகிறது. நான் அண்மையில் தென்னாற்காடு மாவட்டத்திற்குப் போன போது, ஒரு காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர் பதவியை விட்டு விலகிக்கொள்ள எண்ணுவதாகக் கூறினார்: எதற்காக வென்று அவரைக் கேட்டதற்கு, சில சட்டசபை உறுப்பினர்கள் தங்களிடம் வந்து கட்டாயத்தின் பேரில் இராசகோபாலாச்சாரிக்கு எதிராகக் கையெழுத்து வாங்கினார்கள் என்று கூறினார். இது ஜனநாயகத்திற்கு விரோதமான குண்டர்தனம்," என்றார்.

'காட்டுமிராண்டித்தனம்' தொடருகிறது!

நேருவுக்கு, அவர் ஊர் மாணவர் தரும் புத்தாண்டு பரிசு!

அலகாபாத், நவ. 15—

அலகாபாத்திலிருந்து 56மைல் தூரத்திலுள்ள ஒரு ரயில்வே நிலையத்தில் நேற்று ஒரு எக்ஸ்பிரஸ் வண்டியை ஏராளமான மாணவர்கள் வளைத்துக்கொண்டு நிறுத்தி விட்டனர்.

கல்கத்தாவிலிருந்து டெல்லிக்குச் செல்லும் ரெயிலை சக்கா என்ற ரயில் நிலையத்தில் ஏறக்குறைய 250 மாணவர்கள் நிறுத்தி வைத்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மாணவர்களின் கல்வீச்சு காரணமாக ஒரு டிரைவர், ஒரு கார்டு ஆகியோர் உட்பட 12 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும் ஒரு ரயில் பெட்டியின் கண்ணாடி ஜன்னல்கள் யாவும் சுக்கு நூறாகப் போயின.

உத்தரப் பிரதேசத்தில் ரயில் நிறுத்தப் போராட்டம் சில தினங்களுக்கு முன்பே தொடர்ந்து விட்டது.

பிரதாப்கார் மாவட்டத்திலுள்ள லால்கன் என்னும் கிராமத்தில் போலீஸ்காரர்கள் அடங்கிய குழு ஒன்று மாணவர்களால் தாக்கப்பட்டது. இதன் விளைவாக ஒரு போலீஸ் அதிகாரி உள்பட 6 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் சம்பவமாக 18பேர் கைது செய்யப்பட்டனர்.

பாக்.-யு. எஸ். இராணுவ அணி

நேரு கருத்து

புது டெல்லி, நவ. 15—

பாகிஸ்தானில் இராணுவத் தளங்கள் பெறுவது பற்றி அமெரிக்காவுக்கும் — பாகிஸ்தானுக்குமிடையே நடந்து வரும் பேச்சுகள் பற்றி, நிருபர்கள் கூட்டத்தில் பண்டித நேரு பேசுகையில், இந்த ஒப்பந்தங்கள் நடந்ததும், அவைகள் முன்னேறி வருவதும் வியப்பாக இருக்கிறதென்றும், இதுபற்றி, தான் முக்கிய கவனம் எடுத்துக் கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதுபற்றி பல்வேறு நாட்டுத் தூதுவர்களுடன் டில்லியில் தான் கலந்து விவாதித்ததாகவும் அவர் சொன்னார்.

"செய்தி மிகவும் மிஞ்சிவிட்டது. இது பற்றிப் பூர்வாங்க விபரம் தெரிந்த பின்பு நான் விளக்கமாகச் சொல்கிறேன்.

பாகிஸ்தானைப் பற்றி நமக்குக் கவலையில்லை; அது சுதந்திர நாடு; ஆனால், அவர்கள் செய்கையால் ஏற்படும் விளைவுகளைப் பற்றித்தான் நமக்குக் கவலை" என்று குறிப்பிட்டார்.

திரு-கொச்சி தேர்தல்:

பிரஜா-சோஷலிஸ்டு கட்சியில் பிளவு

பம்பாய், நவ. 16—

திருவாங்கூர்—கொச்சி பிராந்தியத்தில் பொதுவுடைமைக் கட்சியுடன் பிரஜா-சோஷலிஸ்டு கட்சி கூட்டு சேருவதை பம்பாய் பிரஜா சோஷலிஸ்டு கட்சியின் நிர்வாகக் கமிட்டி எதிர்த்திருக்கிறது.

திருவாங்கூர்—கொச்சி தேர்தல் ஏற்பாடுகள் பற்றி பிரஜா சோஷலிஸ்டு கட்சியின் தேசிய நிர்வாகக் கமிட்டி நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை மாற்றுமாறு பம்பாய் பிரஜா சோஷலிஸ்டு கட்சியின் நிர்வாகக் கமிட்டி கேட்டிருக்கிறது.

பிறப்பு

தி. மு. கழகப் பொறுப்பாளர் தோழர் ஏ. கோவிந்தசாமி, எம் எல் ஏ, அவர்கள் மனைவியார் தோழியர் பத்மாவதி அம்மையார் 15—11—53 காலை, ஓர் பெண் மகவுக்குத் தாயானார்கள். தாயும் சேயும் நலம்.

அறிவு வளர்ச்சிக் கழக 2-ம் ஆண்டு விழா

காஞ்சீபுரம், நவ. 16—

15—11—53 ஞாயிறு மாலை மேற்படி கழக ஆண்டு விழா தோழர் ந. கச்சபாலயம் தலைமையில் நடைபெற்றது அதுபோது சி. வி. எம். அண்ணாமலை, காஞ்சி— கல்யாண சுந்தரம், என். எஸ். இளங்கோ, வெ. சம்பந்தம் ஆகியோர் பேசினர். கழக செயலாளர் தோழர் டி. மாணிக்கம் நன்றி கூறினார்.

தூத்துக்குடி வழக்கு நிதி

முன் தொடர்ச்சி ரூ	2,514-11—2
சோழவந்தான் ரா. க. தாண்டவன்	1—0—0
பொன்மலை சி. எஸ். ராசு	1—0—0
துறையூர் ப. வீரப்பன்	1—0—0
மண்டபம் காம்ப் வ. சடகோபன்	1—0—0
தூத்துக்குடி ஏ. மகாலிங்கம்	3—0—0
மதுரை, தெற்கு வாசல் எம். எஸ் கந்தராசன் மூலம்	25—0—0
குளக்குடி தி மு க., செ. நடேசன்	10—0—0
விருதுநகர் எம் எஸ். அப்பாவு	1—0—0
மொளையனூர் தி. மு. கழகம்	5—0—0
விழுப்புரம் அ. சட்சணாமூர்த்தி	2—8—0
சென்னை பக்கிங்காம் மில் (நதி இலாகா) தோழர்கள்:	
வ. பாலசுந்தரம்	2—0—0
கோதண்டராமன்	2—0—0
ருத்ரசாமி	1—0—0
லோகநாதன்	1—0—0
நம்மாள்வார்	1—0—0
ஏ. எஸ். மணி	1—0—0
ஆனந்தன்	1—0—0
துரைசாமி	1—0—0
ஐ வெங்கடேசன்	1—0—0
ராசகோபால், ஜான், பக்தவத்சலம், சவுரி, சுப்ரமணியம், எஸ். எஸ். சுப்ரமணி, தேவராசன், இருசப்பன், முனுசாமி, வரதன், ஆறுமுகம் முதலியோர்	4-14—0
காரைக்குடி மணிமுடியரசன்	1—0—0
கடலூர் டாக்டர் எம் எஸ். எம். பிள்ளை	2—0—0
வாணியம்பாடி எம். கிருஷ்ணன்	3—8—0
„ பி கிருஷ்ணன், கோவிந்தன், ஏழுமலை ஆகியோர்	1—8—0
தஞ்சை கே. தமிழரசி	1—0—0
கோயமுத்தூர் கே. எஸ். நடராசன்	2—0—0
தஞ்சை எஸ். கே. வி நடராசன்	2—8—0
„ எஸ். வி. அப்பாச்சாமி	2—8—0
ஆவடி வி ராமமூர்த்தி மூலம் வசூல்	8—0—0
தஞ்சை வி. சுந்திரப்ப நாடார்	8—0—0
„ ஆ. டி. ராசன்	2—0—0
காங்கேயம் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்	6—0—0
கல்லாம்பாளையம் என் பழனிசாமி	1—0—0
பிளமேடு ஆர். முத்துசாமி	1—0—0
சென்னை-6 ஆர் வையத்தரசு	1—0—0
வீரவநல்லூர் பி. சுப்பையா	1—0—0
கரிசல்குளம் வாழ சிவ சுப்ரமணியம்	2—0—0
கொண்டியக்காடு கா. பாண்டியன்	1—8—0
கற்பகநாதர்குளம், சிதம்பரம், தர்மலிங்கம்	1—0—0
கோவை ராமசாமி-கண்ணம்மாள் திருமணத்தில் (எம். எஸ். ராமசாமி மூலம்)	5—0—0
சீரங்கம் எம். ஆர். நாதன்	3—0—0
„ மனோகரன்	2—0—0
„ பி. ஆர். சீனிவாசன்	1—0—0
பழைய ஆயக்குடி தி. மு. கழகம்	10—0—0
நிலக்கோட்டை தி. மு. இளைஞர் கழகம் (கருணாகரன் மூலம்)	12—1—0
கோபாலசமுத்திரம்பட்டி கே. ஆர். குப்புசாமி	1—0—0
„ கந்தசாமி	1—0—0
„ மூக்கன்	1—0—0
„ அக்பர்	1—0—0
„ என். மாணிக்கம்	1—0—0
„ எம். மூக்கன், சின்னதம்பி	1—0—0
புதுப்பாளையம் கு. நடராசன்	1—0—0
வெங்கிடங்கால் கிலாவதி-சந்தானம்	5—0—0
„ என். முத்தையன்	5—0—0
„ எஸ். சம்பந்தம்	2—0—0
„ எஸ். குருசாமி	1—0—0
„ எஸ். ராதாகிருஷ்ணன்	1—0—0
„ ரெ. சுப்பையன்	1—0—0
„ சா. ராமசாமி	1—0—0
„ சோ. வீரப்பன்	1—0—0
„ இராசு	1—0—0
„ கெ. நாராயணசாமி	1—0—0
„ வரதராஜுலு	1—0—0
„ வெங்கடாசலம்	1—0—0
„ ரெ. வீரராகவலு	1—0—0
„ கோவிந்தராஜுலு	1—0—0
„ அ. ராசமாணிக்கம்	1—0—0
„ மருதை, முருகன், கருப்பையன், கோவிந்தன், சுப்ரமணியன், ந. சண்முகம், கோ. பக்கிரிசாமி, மாரிமுத்து, கா. கையன், க. பிச்சையன், பாப்பாத்தி, இடும்பன், அஞ்சான், ராமையா, முருகன், சுந்தரராசு, பூ. பக்கிரிசாமி ஆகியோர்	8—0—0
திருவாரூர் கருணை எம். ஜமால்	5—0—0
திட்டச்சேரி ப. கோதண்டபாணி	1—0—0
சிங்கப்பூர் சுப. அடைக்கலம்	2—0—0
„ மா. வீராசாமி	7—8—0
„ சி. சி. கணேசன்	6—8—0
„ க. கோபால்	7—0—0
„ வி. ராசகோபாலன்	7—8—0
„ கோ. வரதராசு	7—8—0
„ மா. வேலாயுதம்	7—8—0
„ ம. பக்கிரிசாமி	6—0—0
„ மா. ரங்கசாமி	6—0—0
„ உ. வி. தனிக்கொடி	3—0—0
„ கோ. சிவசாமி	3—0—0
„ சி. ஐயாப்பன்	1—8—0
„ கா. பொதியப்பன்	8—0—0
„ வை. சிவபெருமாள்	8—0—0

(தொடர்ச்சி அடுத்த பத்தி பார்க்கவும்)

கன்னடத் தலைநகரில் "தூத்துக்குடி வாரம்"

பொறுப்பாளர் ஏ. கோவிந்தசாமியின் 'திராவிட நாடு' விளக்கம்

பெங்களூர், நவ. 16—

"தூத்துக்குடி தோழர்கள் காலவரையறையின்றி சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருப்பது, அவர்கள் செய்ததாகச் சொல்லப்படும் குற்றங்களுக்காகவல்ல; காங்கிரஸ் கட்சியின் திரைமறைவு சதியும் அதில் சம்பந்தப்பட்டிருக்கிறது. தூத்துக்குடி நகர சபையில் மெஜாரிட்டியைப் புகுத்திக் கொள்வதற்காகவே, தோழர்கள் நடராசன், தங்கப்பழம் போன்றவர்கள்மீது கடுமையான வழக்குகள் சுமத்தப்பட்டிருக்கின்றன."

"புதுக்கிராம சம்பவம், தி. மு. கழகத் தோழர்களுக்கு எந்த [illegible]யிலும் சம்பந்தப்பட்டதல்ல; போராட்டத்தில் ஈடு ப[illegible]க்கும் தி மு. கழகத் தலைவர்கள்மீது பழி சுமத்தி தப்[illegible]துக் கொள்ளலாம் என்ற எண்ணம் படைத்த சில கா[illegible]ளின் செய்கை அது!"

"புது[illegible]ராம சம்[illegible]வங்களுக்கும், தி. மு. கழக எதிர்ப்பு சக்திகளுக்கும் [illegible]மே [illegible]ல் தொடர்பிருக்க வேண்டும். இந்த உண்மை போ[illegible]ாகத் தெரியும். நிரபராதிகள் தண்டனை அனுபவிப்பது நீதிய[illegible] நேர்மையல்ல; ஜனநாயகம் அல்ல."

—இவ்வ[illegible], தி.மு கழகத் தலைமை நிலையப் பொறுப்பாளர் தோழர் ஏ. கோ[illegible]ந்தசாமி, எம்.எஸ்.ஏ., அவர்கள், பெங்களூரில் 8-11-53ம் தேதிய[illegible] நடைபெற்ற தூத்துக்குடி வாரப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அ[illegible] பேசியதாவது:- கன்னடத்[illegible] தலைநகரான இந்த பெங்க[illegible] நகரத்திலே, தூத்துக்குடி வ[illegible] கொண்டாடப்படுவதும், அ[illegible]ல் தமிழகத்தைச் சேர்ந்த நா[illegible] பேசுவதும் உள்ளபடியே எனக்[illegible] மகிழ்வை யூட்டுகிறது.

"தி. மு. கழகம், [illegible]மிழர், தெலுங்கர், மலையாளிகள், கன்னடத்தார் ஆகியவர்களின் [illegible]ம் மதத்துடன் கூடிய கூட்ட[illegible] யின் அடிப்படையிலே, தெ[illegible] ஒடு பிரிந்து தனியரசாதல் வேண்டும்," என்று போராடிக் கொண்டு வருகிறது.

இந்த லட்சியத்தைக் கேலி பேசுவோர், தமிழகத்தில் சிலர் இருக்கிறார்கள்! அந்தச் சிலர், கன்னடத்திலே, இன்று நான் வந்து பேசுவதைப்பற்றி என்ன சொல்வார்களோ தெரியாது.

இங்கு கூட்டப்பட்ட கூட்டம், 'தூத்துக்குடி வாரம்' கொண்டாடும் முறையில் கூட்டப்பட்ட [illegible]கும். 'தூத்துக்குடி வாரம்'

(முன் பத்தியின் [illegible]ர்ச்சி)

„ வி. வைத்தியலிங்கம்	1—8—0
„ ந. செல்லபெருமாள்	1—8—0
„ இர. கணபதி	3—0—0
„ ந. மா. வீராசாமி	1[illegible]
„ ரெ. அப்பாதுரை	1[illegible]
„ ப. கணேசன்	3—0[illegible]
„ க. பாலசுந்தரம்	1—8—0
„ மா. கணேசன்	3—0—0
„ கோ. சி. மணியம்	1—8—0
„ கி. சி. கணேசன்	1—8—0
„ ரா. கணேசன்	1—8—0
„ ப கதிரேசன்	1—8—0
„ சி ரத்தினம்	1—8—0
„ அ. ரங்கசாமி	1—8—0
„ த. வடிவேலையன்	1—8—0
„ ப. ராமன்	1—8—0
„ நா. நடராசன்	3—5—0
„ கோ. வீராசாமி	1—8—0
„ அ பொன்னுக்கண்ணு	1—8—0
„ உ. கா. உத்ரபதி	1—8—0
„ ப. மாணிக்கம்	3—0—0
„ மா. கணேசன்	3—0—0
„ சி. பொன்னுசாமி	1—8—0
„ அ ஜெகநாதன்	3—0—0
„ சே. கா தங்கவேல்	1—8—0
„ சே. ராமசாமி	3—0—0
„ கா. ம. முத்துசாமி	1—8—0
„ ப சுந்தரராஜ்	1—8—0
„ சி தங்கவேல்	2—4—6
„ கே. வி. சின்னதம்பி	3—0—0
„ அ. கெ. அருணாசலம்	1—8—0
„ அ. சாமிநாதன்	1—8—0
„ மு. அர்ச்சுனன்	3—0—0
„ மு. கிருஷ்ணன்	3—0—0
„ எ. கோவிந்தசாமி	1—8—0
„ இர. அம்மையப்பன்	1—8—0
„ கோ பக்கிரிசாமி	1—8—0
„ வி. கண்ணுசாமி	1—8—0
„ த. வேம்பையன்	1—8—0
„ எஸ். பிரம்பையன்	3—0—0
„ நாகையன்	3—0—0
„ த நடேசன்	3—0—0
சென்னை வில்லிவாக்கம்—பாடிகிராமத் தோழர்கள்:	
„ பா. ம க மணி,	2—0—0
„ அப்பாவு	1—0—0
„ ராமசாமி,	1—0—0
„ இராசன்	2—0—0
„ பா. து. நடராசன்	1—0—0
„ மு. கோ. க. மணி	2—0—0
„ பால்ராஜ்	1—0—0
„ பா. ம. முத்து, தர்மராஜ் ஆகியோர்	1—2—0
மேற்படி தோழர்களால் உண்டியல்மூலம் வசூல்	2-12—6
ஆகமொத்தம் ரூ	2,872-10—[illegible]

திருமங்க[illegible]தார் செப்படி வித்தை

நேர்மையிருந்தால் கடிதத்தை வெளியிடட்டும்!

"சென்னை மாநிலப் பிரதமர் ஆச்சாரியாருக்கு பண்டித நேரு எழுதியுள்ள கடிதத்தில், ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டத்தை, தான் ஆதரிப்பதாகவும், அதை இந்தியா முழுதும் பரப்புவதுபற்றி யோசிப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்" என்று, மந்திரி ராஜாராம் நாயுடு திருவண்ணாமலையில் கூறினார்.

என்பது, திராவிட முன்னேற்றக் கழகத்தின், அறிக்கையின் பாற்பட்டது ஆகும்.

கடந்த ஜூலை 15-ம் தேதி முதல் இன்று வரையில் கேள்வி கேட்பாரற்று, சிறையிலே வதியும், தி. மு. கழகச் செயல் வீரர்களான தோழர்கள்: சிவசாமி, தங்கப்பழம், நடராசன், சாமி, ரத்தினம் போன்ற 96 தோழர்களின் விடுதலைக்காகவும், அவர்கள்மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளை வாபஸ் வாங்கக் கோரியும், மக்கள், தங்களது குரலை அரசாங்கத்துக்குத் தெரிவிக்க நிர்ணயப்படுத்தப் பட்டதுவே, இந்தத் தூத்துக்குடி வாரம்.

தென்னாட்டின் தென்கோடியிலே — நெல்லை ஜில்லாவிலே அடக்குமுறைக்கு ஆட்படுத்தப் பட்டிருக்கும் தோழர்களுக்காக, இந்தக் கன்னடம், கண்டனம் தெரிவித்துக் கூட்டம் நடத்துகிறது என்றால், அது, திராவிடர் என்ற ஒரே ரத்தபாசத்தின் விளைவு அல்லாமல்வேறு எதுவாக இருக்க முடியும்?

கன்னடத்தவர், தமிழர், தெலுங்கர், மலையாளி ஆகிய நால்வரும் உச்சரிக்கும் வார்த்தைகளில் உள்ள ஒலிபேதம் தவிர, வேறென்ன மாறுபாடு [illegible]க்கிறது?

[illegible]ந்த ஒரே இனத்தின் வழி[illegible] மக்களை, தனது பாசப் பிடிப்[illegible] மூலம் என்றென்றும் அடிமைப்ப[illegible]த்திருக்க விரும்பும் வட[illegible]திபத்தியத்தை எதிர்த்து, [illegible]டத்தும் விடுதலைப் போர[illegible] வெற்றிகாண வெகுகாலம் ஆகாது.

திராவிடம் அமைவது தடுக்க முடியாதது என்பதை, அக்டோபர் மாதம் 1-ம் தேதி ஆந்திர மாகாணம் பிரிந்ததிலிருந்தே நிச்சயமாகிவிட்டது.

இப்போது, தனி மாகாணம் கோரி நிற்கும் கன்னட இயக்கம் மிகவும் உச்ச நிலைக்கு வந்திருக்கிறது

ஆந்திரம் போலவே, கன்னட மாகாணத்தின் கோரிக்கையும் நிச்சயம் வெற்றி பெறும்.

இதுபோன்ற வெற்றிகளை விரைவில் கொண்டுவரப் பாடுபடும் தி.மு கழகத்தின் போராட்டங்களையும், அதன் லட்சியத்தையும் கன்னடர்களாகிய நீங்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

நாம் எல்லோரும் வடநாட்டு ஏகாதிபத்தியத்தால் அடிமைப் படுத்தப்பட்டிருக்கிறோம்.

அந்த நாளிலே, ஆங்கிலேயர், வியாபாரி கோலத்திலே வந்து, சிறுகச் சிறுக ஆதிக்கம்பெற்று முடிவில், அடக்கி ஆள்பவராகவே ஆகிவிட்டதைப்போல், இன்று வடநாட்டார்கள், தேசியத் தலைவர்கள் என்ற போர்வையில் தென்னாட்டிலே 'சர்வாதிகாரம்' செலுத்த முனைந்துள்ளார்கள்.

ஆங்கிலேயன், ஆங்கில மொழியையே அரசியல் மொழியாக்கி, எல்லாவித நடவடிக்கைகளையும் ஆங்கிலத்திலேயே நடத்திக் கொண்டு வந்ததைப்போல இன்று, இந்தியை தேசிய மொழி என்று கூறிக்கொண்டு நம்மை [illegible]

(4-ம் பக்கம் பார்க்க)

விதவைகள் அதிகம் திராவிடத்தில்தான்!

மணமான பெண்களில் மூன்றில் ஒருவர் விதவையாம்!

நீண்டகாலம் உயிர்வாழ்வதென்பது ஆண்களிடம் காணப்படுகிறது.

இதன் எதிரொலியினுல், 1951-ஆம் ஆண்டு மக்கள் எண்ணிக்கை புள்ளி விவரத்தில், விதவைகள் தொகை 12·8 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது. இதே விதவைகள் தொகை 1931-ல் 16·1 சதவிகிதமாக இருந்தது. விதவைகளை மணந்துகொள்ளக் கூடாது என்ற வழக்கத்திற்கு மாறாக, கணிசமான மாற்றம் ஏற்படவில்லையாகுலும், விதவைகள் குறைந்திருப்பதை புள்ளி விவர அதிகாரி, ஆண்களின் நீண்ட ஆயுளுக்குக் காரணமாகக் காட்டுகிருர்.

ஆண்களில் 5 சதவிகிதத்தினரே தாரமிழந்தவர்களாக இருக்கும்பொழுது, பெண்களில் 12·8 சதவிகிதத்தினர் இருக்கின்றனர்.

“அனைத்து இந்தியாவிலும் நான்கு மணமானப் பெண்களில் ஒருத்தியே விதவையாக இருக்கும்பொழுது, தென்னிந்தியாவில் மூன்று மணமானப் பெண்களில் ஒருத்தி விதவையாக இருக்கிருள்.”

வட இந்தியாவில் தான் விதவைகள் தொகை குறைவாக இருக்கிறது. இந்தியாவின் மொத்தத் தொகையுடன் பார்க்கும்பொழுது வட இந்தியாவில் 7.0 சத விகிதமும், வடமேற்கு இந்தியாவில் 6.0 சதவிகிதமும் இருக்கின்றன.

மத்திய இந்தியாவில் 4.9 சதமும், கிழக்கு இந்தியாவில் 4.4 சதமும், தெற்கு, மேற்கு இந்தியா ஒவ்வொன்றிலும் 4.2 சதமும் விதவைகள் தொகை இருக்கிறது.

விவாக விடுதலை பெற்றவர்கள் தொகை 1,44,786 என்று மொத்த மக்கள் எண்ணிக்கையில் இது 0.4 சதமாகிறது என்று கூறப்படுகிறது.

இந்தி[illegible]ளை தொகை முழு[illegible] 4.1 சத விகிதத்தினர் மணமாகாதவர்கள் 10,000 மக்களில் பெண் 4,867 ஆகவும் ஆண்கள் 5,133 ஆகவும் உள்ளனர். இவர்களில் மணமாகாத ஆண்கள் 2,521 ஆகவும், பெண்கள் 1,886 ஆகவும் உள்ளனர்.

தென்னிந்திய மக்கள் தொகையில் 48. 2 சத விகிதத்தினர் மணமாகாதவர்களாக உள்ளனர். மற்றப் பகுதியைக் காட்டிலும் இங்குதான் மணமாகாதவர்கள் தொகை அதிகமாக இருக்கிறது.

இந்தியா முழுவதும் சேர்த்துக் காணும்பொழுது, 10,000 மக்களில் 2,353 ஆண்களும், 2,357 பெண்களும் மணமானவர்களாக உள்ளனர். ஆண்கள் தொகையும் பெண்கள் தொகையும் சமமாக இல்லாத காரணத்தினுல்தான், மணமானவர்களில் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் கூடுதலாக இருக்கிருர்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. பலதார மணம் நடைமுறையில் இருந்தபோதிலும், அது அருமையாகவே இருந்து வருகிறது.

மணமான ஆண் பெண் எண்ணிக்கை ஒத்து இருந்தபோதிலும், இதில் வட்டார வாரியாக உள்ள புள்ளி விவரங்கள் ருசிகரமானவையாகும். மேற்கு இந்தியாவில் 10,000 எண்ணிக்கையில் மணமான பெண் ஆண் தொகை 2,228 என்ற வகையில் சமமாக இருக்கிறது.

தென்னிந்தியாவில் விசித்திரமான நிலைமை இருக்கிறது. மணமான பெண்கள் 2,074 ஆக இருக்க ஆண்கள் 2,169 ஆக இருக்கின்றனர். இதற்கு சமமாக கிழக்கு இந்தியாவில் 2,438 மணமான பெண்களாக இருக்கும்பொழுது, ஆண்களில் மணமானவர்கள் 2,532 ஆக இருக்கிருர்கள். வடகிழக்கு இந்தியாவிலும் மணமான ஆண்கள் 2,326 ஆகவும் பெண்கள் 2,291 ஆகவும் இருக்கிருர்கள்.

இந்த ஏற்றத் தாழ்வை சரி செய்யும் முறையில் வடஇந்தியாவில் 2,441 மணமான ஆண்களாகவும், 2,482 மணம்செய்து கொண்ட பெண்களாகவும் உள்ளனர். மத்திய இந்தியாவில் 2,463 மணமான ஆண்களும், 2,483 மணமான பெண்களும் உள்ளனர்.

கிழக்கு இந்தியாவில் பலதார மணம் நடைமுறையில் இல்லாதிருந்தும், இந்த வித்தியாசம் உள்ளதற்கு, ஆண்களின் வெளியேற்றமே காரணமாகும்.

மனைவிமார்களை இங்கேயே தங்க விட்டுவிட்டு, தென்னிந்தியாவில் குறிப்பிடத் தகுந்த அளவில் பல மணமான ஆண்கள் வயிற்றுப் பாட்டிற்காக வெளி நாடுகளுக்குச் சென்று பாடுபடுவது அறிந்த விஷயமாகும்.

வெளியையே வீடாகக் கொண்டவர் எண்ணிக்கை சென்னையில்தான் அதிகம்

அனுதாபங்கள்

★

திருக்கோட்டியூர் தி. மு. கழக செயலாளர் கி. முத்துசாமி அவர்களின் சிறிய தந்தை கோவிந்தசாமி அவர்கள் சென்ற மாதம் இயற்கை யெய்தியது குறித்து திருக்கோட்டியூர் தி. மு. கழகம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

• • •

கணியூர் தி. மு. கழகப் பொறுப்பாளர் கே. [illegible] அவர்களின் தாயார் [illegible] குறித்து, 8—11—53 ல் [illegible] பெற்ற கணியூர் அமைப்புக் கமிட்டி கூட்டத்தில், அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

* *

தில்லை தி. மு. கழக சயற்குழு உறுப்பினர் தோ. இரா. தங்கையன் அவர்களின் புதல்வன் “அழகிரி” 9—1[illegible]—53-ல் மறைந்தது குறித்து நகர் தி. மு. கழகம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது என, இரா. சக்ரவர்த்தி தெரிவிக்கிருர்.

ஜாதிப் பெயர்களை அதிகாரிகள் கேட்டு பதிவு செய்யவில்லை

சென்னை, நவ 13—

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 1951 ல் நடைபெற்றது பற்றிய அறிக்கையை இந்திய அரசாங்கம், இவ்வாண்டு வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையைத் தயாரித்த ‘சென்ஸஸ் கமிஷனர்’ ஆர். ஏ. கோபாலசாமி, ஐ. சி. எஸ்., நேற்றைய தினம், பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியின்போது, அறிக்கை சம்பந்தப்பட்ட பல்வேறு கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்போது மக்கள் தங்களின் ஜாதிப் பிரிவுகளையும், வகுப்பையும் சொல்லுமாறு கட்டாயப்படுத்தப் படவில்லை என்றும், அவர்களாக, தாங்கள் இன்ன வகுப்பைச் சார்ந்தவர்கள் என்று சொன்னுல் மட்டுமே பதிவு செய்யப்பட்டதாகவும் அவர் சொன்னுர்.

மக்கள் தொகை, இந்தியாவில் படிப்படியாக வளர்ந்துள்ளதென்றும், இன்னும் 10 ஆண்டுகளில், இப்போது சுமார் 39-கோடியாக உள்ள எண்ணிக்கை இன்னும் அதிகமாகலாமெனவும் குறிப்பிட்டார்.

வீடில்லாது, நடைபாதைகளிலும், தெரு ஓரங்களிலும் வசிப்பவர்களையும் கணக்கில் சேர்த்துக்கொள்ள இந்திய அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டது. அவர்களில் சிலர் கணக்கில் சேர்க்கப்படாமலும் போயிருக்கலாம்.

இம்மாதிரி வீடில்லாது, நடைபாதைகளிலேயே வாழ்பவரின் எண்ணிக்கை, சென்னை மாநிலத்தில்தான் மிக அதிகம்.

“மக்கள் தொகை, அதிகமாவதற்கு, ஏழை மக்களுக்கு குழந்தைப் பேறு பெறுவதைத் தவிர, அவர்கள் வாழ்வில் வேறெந்த இன்பமுமே இல்லையென்பதும் ஒரு காரணம் என்பது உண்மைதானு?” என்று கேட்கப்பட்டபோது, அது உண்மையல்ல வென்றும், இயற்கையாகவே, இந்தியப் பெண் 50 வயதிற்குள் சராசரியாக ஆறு குழந்தைகட்கு தாயாகிருள் எனவும், மக்களாகவே, குழந்தைப் பேற்றைக் கட்டுப்படுத்த வேண்டிய தன் அவசியத்தை உணர்ந்தாலல்லாது மக்கள் தொகை அதிகரிப்பைக் குறைப்பது சாத்தியமல்ல என்றும் சொன்னுர்.

இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பற்றிய அறிக்கையைத் தயாரிப்பதில் மாநில அரசுகளின் கருத்தறியப்படவில்லை என்றும், அவைகளின் கருத்தையும் அறிந்த பின்னர் அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தால் இன்னும் நன்ருயிருந்திருக்கும் என்றும், ஆனுல் அறிக்கை இப்போது கூட வெளிவர முடியாமல் இன்னும் காலதாமதமாயிருக்கும் என்றும் கூறினுர்.

“மக்கள் தொகையில், இந்தியாவிலேயே சென்னைக்கு இரண்டாவது இடம்,” என்ருர் அவர்.

உற்பத்தியைப் பெருக்குவதைக் காட்டிலும், மக்கள் தொகை பெருகுவதைத் தடுப்பது சிறந்ததென்று அவர் குறிப்பிட்டார்.

கன்னடத் தலை நகரில்......

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சர்வாதிகாரத்தை ஸ்தாபிக்கப் பார்க்கிருர்கள்.

இந்த வஞ்சகமான திட்டத்தை அமுல் நடத்தும் முதற்படியாக, தென்னுட்டிலேயுள்ள, எல்லா இரயில் நிலையங்களிலும் பிரதேச மொழிகளை அலட்சியப்படுத்தி, அவமானக் குள்ளாக்கி, இந்திமொழி பெயர்களை முதலில் [illegible]

[illegible] விடுதலை இயக்க [illegible] மு. கழகம், இந்தியைப் [illegible] அரசியல் குறாட்டத் [illegible] எதிர்த்து அழிக்கும் முறையில், எல்லா ரயில் நிலையங்களிலும் கடந்த ஜூலைத் திங்கள் 1-ம் நாள், இந்தி அழிப்புப் போரிலே ஈடுபட்டது.

ஒரே நாளில்—திராவிடத்தின் எறக்குறைய எல்லா இரயில் நிலையங்களிலும் — இந்தக் கன்னட பூமியில் உள்பட—இந்திப் பெயர்கள் இருந்த இடம் தெரியாமல் அழிக்கப்பட்டன.

இதைக் கண்ட பண்டிதர் நேரு — நடைபெற்ற ஏகாதிபத்தியத்தின் தூண்—சினம் மிகக் கொண்டார்; ‘இந்தி அழிப்புக் காரியம், முட்டாள் தனமானது, சிறுபிள்ளைத் தனம் வாய்ந்தது,’ என்று வசைபாடி, தனது பலவீன நிலையைக் காட்டிக் கொண்டார்.

மேல் பதவி வகிக்கும் ஒருவரின் கீழ்த்தரமான இந்தப் போக்கைக் குறித்து, தஞ்சையில் கூடிய பொதுக்குழு கூட்டத்தில், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் தோழர் அண்ணுதுரை அவர்கள், “பெரிய மனிதர், சின்னத்தனமாக நடந்து கொண்டார்; அதை மறப்போம்; அவர் செய்த தவறை மன்னிப்போம்,” என்று கூறினுர். இது, அவரின் பெருந்தன்மையைக் காட்டவில்லையா?

இந்தப் பெருந்தன்மைக்குத் தலை வணங்க வேண்டிய நேரு, மீண்டும் தனது சிறுபிள்ளைத் தனத்தைக் காட்டி, ஒரு மாபெரும் சமுதாயத்தினரின் மனதைப் புண்படுத்திவிட்டார்.

தமிழகத்திற்குச் சேவை செய்யவேண்டிய எல்லைப் பிரதேசங்கள் பற்றி, திருத்தணியிலே நடைபெற்ற கிளர்ச்சிகளின்போது, தங்களது அதிருப்தியைக் காட்டிக் கொள்ள ஒருசிலர் ரயில் வண்டிகளை, கொஞ்ச நேரம் நிறுத்தினுர்கள். இந்தச் செய்கையைக் குறித்து, [illegible] பிள்ளைத்தனமாகவும், [illegible]டாள்தனமாகவும் செய்யப்[illegible] ரயில் நிறுத்தக் கிளர்ச்[illegible] பற்றி இனி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும், [illegible] பண்டித நேரு வீண் வீரம் [illegible] நேரு தவிர, ஏன் ரயில்கள் [illegible] நிறுத்தப்பட்டன, நிறுத்துவதற்கு ஏற்பட்ட அவசியம் என்ன என்பதை ஆராய்ந்து பார்க்கத் தவறிவிட்டார்.

இரண்டாம் தடவையாக பொறித்த தன்னிய ஆணவமான சொற்களையும், வெறும் வீராப்புப் பேச்சையும் இனியும் சகித்துக் கொண்டிருக்க முடியாது என்று, சிதம்பரத்தில் கூடிய, தி. மு. கழக மாநாட்டில், தி.மு. கழகப் பொதுச்செயலாளர் அவர்களால் ஒரு முடிவெடுக்கப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

“ஜூலை மாதம் 15-ம் தேதி, நேருவின் ஆணவப் பேச்சைக் கண்டிக்கும் முறையில், திராவிடத்தில் ஓடும் ரயில் வண்டிகளை, பகல் நேரத்தில் மட்டும், யாருக்கும் — எதறும் சிறு தொல்லையும், சேதமும் ஏற்படாத வகையில், கொஞ்ச நேரம் நிறுத்துவது,” என்பதாக அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இம்மாநாட்டிற்கு அடுத்து கூடிய, சென்னை மாநாட்டிலும் இது வலியுறுத்தப்பட்டு, ஜூலை 15-ல் ரயில் நிறுத்தப்படும் செதியை, அரசாங்கத்துக்கும், மற்றும் ரயில்வே சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக பொதுமக்களின் தீர்புக்கும் விடப்பட்டு, தி. மு. கழகத்தின் போராட்டம் அமுல் நடத்தப்பட்டது.

பகிரங்கமாக—பட்டப்பகலில் எல்லோருக்கும் தெரிவித்துவிட்டு செய்யப்பட்ட ஒரு கிளர்ச்சியில், சதித் திட்டமும் கலந்திருக்கிறது என்று ஒரு குற்றம் சாட்டி, அரசாங்கம் தூத்துக்குடி தோழர்கள் 96 பேரையும், காலவரையறையின்றி காராகிருகத்தில் தள்ளிவைத்திருக்கிறது.

வழக்கில் சம்பந்தப்பட்ட நடராசன், தங்கப்பழம் ஆகியோர் கண்ணியமிக்கவர்கள். முனிசிபல் கவுன்சிலர் பதவி வகிப்பவர்கள். தூத்துக்குடி நகரசபையோ, காங்கிரஸ் மெஜாரிடி இல்லாதது.

அனேவே, கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, கவுன்சிலர் பதவி வகிக்கும் எதிர்க்கட்சித் தோழர்களைப் பழி வாங்கி, தன்னுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ள வேண்டும் என்ற காங்கிரஸ் கட்சிக்காரர்களின் சூழ்ச்சிக்கு அரசாங்கமும் ஒத்தாசை, தோழர்களின் வாழ்வைக் கசக்கி எறியப் பார்க்கிறது.

இதற்கு நாம் இடம் தரக் கூடாது. தூத்துக்குடி தோழர்களின் வழக்கை எப்படியும் வெற்றிபெறும் படியாக முடித்துக் காட்ட வேண்டும்.

“நாடே ஒருமுகமாகத் திரண்டு, தூத்துக்குடி வழக்கு அநியாயமானது என்பதை முழக்க வேண்டும். இந்த முழக்கத்தை ஆணவ வெறி பிடித்த சர்க்காரின் கவனத்துக்குக் கொண்டுவரவேண்டுமென பதற்காகவே, ‘தூத்துக்குடி வாரம்’ ஏற்பாடு செய்யப்பட்டது.”

“தூத்துக்குடி தோழர்களின் வழக்கை வாபஸ் பெறக் கோரி, கன்னடத்திலிருந்தும் எதிர்ப்புக் குரல் கேட்பதைக் காண நான் பெரிதும் மகிழ்கிறேன்,” என்று கூறி முடித்தார்.

‘நடமாடும் கோர்ட்டுகள்’

நிலத் தகராறுகளை விரைவில் முடிக்க வசதி

கல்கத்தா, நவ. 14—

நிலத் தகராறுகளை சீக்கிரம் முடியடிப்பதற்காக ஒவ்வொரு ஜில்லாவுக்கும் நடமாடும் கோர்ட்டுகளை அனுப்ப நேபாள சர்க்கார் முடிவுசெய்திருக்கிறது.

நேபாளத்தில் இருக்கும் நிலங்கள், நல்ல வளப்பமுள்ளவை. ஜமீன்தாரர்களுக்கும், விவசாயிகளுக்கும் ஏற்பட்ட தகராறுகளினுல் பல இடங்களில் பூமிகள் தரிசாகக் கிடக்கின்றன. நேபாளத்தில் மொத்த மக்கள்தொகையில் நிலப் பிரபுக்கள் 15 சத விகிதமாயிருக்கின்றனர்.

மக்கள் தொகையில், 40 சத விகிதத்தினர் நிலமில்லாத விவசாயிகள். சமீப காலங்களில் எல்லா அரசியல் கட்சிகளும் நில சீர்திருத்தம் கொண்டு வருவதாகக் கூறிப் பொதுமக்கள் ஆதரவைப் பெற்றன.

திருப்பூர் வள்ளுவர் படிப்பகம்

5—11—53-ல் படிப்பக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, அ. மாரப்பன் தலைவராகவும், பி. கோவிந்தசாமி துணைத் தலைவராகவும், எம். நடராசன் செயலாளராகவும், ஜி. நடராசன் உதவி செயலாளராகவும், கே. பழனிப்பன் பொருளாளராகவும், மற்றும் உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இம்மாத இதழ் வாசித்தீர்களா?

“பகுத்தறிவு”

ஆசிரியர்: ப. கண்ணன்

கார்த்திகை இதழ் எங்கும் விற்பனையாகின்றது. இல்லாத ஊர்களுக்கு முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.

தனிப்படி ... 0—4—0

ஆண்டுக்கையொப்பம் 3—0—0

“பகுத்தறிவு” அலுவலகம், சலகண்டபுரம், சேலம்மாவட்டம்

திராவிட முன்னேற்றக் கழகத் [illegible] தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அறிவில் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (21, [illegible] நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுவது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.